**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. SRI VINAYAGA GRANITES, S.F.NO'S: 331/1A (PART), 332/1, 332/2, 332/3, 332/4, 332/5 (PART) & 332/6, LEASE OVER AN EXTENT OF 3.38.0.HA, JEGADEVIPALAYAM VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT HELD ON 24.09.2025 AT 11.00 AM AT M/S.SRI MAHESHWARI MAHAL, D.NO. 1/190, NH-77, TIRUVANNAMALAI MAIN ROAD, ANCHOOR VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT.**

Present:

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.N. Shahjahan | : | Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. C.Muthuraj | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. A.Jothi Prakash | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru. J. Manivasagam | : | The Proprietor M/s. Sri Vinayaga Granites Grey Granite Quarry |
| 5 | Thiru.K. Vijayaragavan | : | EIA Consultant, M/s. Geo Technical Mining Solutions, Dharmpauri |
| | Public | : | 110 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed M/s. Sri Vinayaga Granites, S.F.No's: 331/1A (Part), 332/1, 332/2, 332/3, 332/4, 332/5

Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinamalar" and "The New Indian Express" dated 14.08.2025 and pamphlets regarding public hearing were issued to the public of Rasanakottai Village, Jagadevi Village, Sandarapalli Village and Anchoor Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same along with the Minutes of the Meeting will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the project proponent was requested to explain about their proposed Grey Granite quarry project through power point presentation.

Thereafter, Thiru.K. Vijayaragavan, EIA Consultant, M/s. Geo Technical Mining Solutions, Dharmpauri of the proposed Grey Granite quarry project has made presentation about the proposed Grey Granite quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Grey Granite quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Vinoth, Jagadhevipalayam Village:**

Thiru. Vinoth has said that there are no issues with the proposed quarry project and requested that priority should be given to local village people for employment opportunities at the quarry.

2. **Thiru. Veeramani, Perukopanapalli Village:**

Thiru. Veeramani has said that the local village people will be benefitted by the proposed quarry project and also welcomed the Project.

3. **Thiru. Saravanan (Former Vice President of the Village Panchayat), Jagadhevipalayam Village:**

Thiru. Saravanan said that he has no objection to the establishment of the quarry and also he requested that employment opportunities be provided to the people in the surrounding village areas.

4. **Thiru.Syed Ahamed Jitopanapalli Village:**

Thiru. Syed Ahamed has said that he welcome the proposed quarry and also added that the quarry management will provide direct and indirect employment opportunities

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 14 number of petitions were received on the proposed M/s. Sri Vinayaga Granites Grey Granite Quarry during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Grey Granite Quarry project and no email representation was received in the. O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| District Environmental Engineer<br>Tamilnadu Pollution Control Board<br>Hosur | Revenue Divisional Officer<br>Krishnagiri | District Collector<br>Krishnagiri |
|---|---|---|

**திரு. ஸ்ரீ விநாயகா கிரானைட்ஸ் சர்வே. எண். 331/1A (பகுதி), 332/1, 332/2, 332/3, 332/4, 332/5 (பகுதி) & 332/6, ஜெகதேவிபாளையம் கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் உத்தேசிக்கப் பட்ட கிரே கிரானைட் குவாரி –3.38.00 ஹெக்டேர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 24.09.2025 அன்று, , கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் வட்டம், அஞ்சூர் கிராமம், திருவண்ணமாலை மெயின் ரோடு, எண். 1/190, தே. நெ எண். 77, இல் அமைந்துள்ள திரு. ஸ்ரீ மகேஷ்வரி மஹாலில் - முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.நா.ஷாஜகான் | : | வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. செ.முத்துராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er. அ.ஜோதிபிரகாஷ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு.J.மணிவாசகம் | : | உரிமையாளர்,<br>திரு. ஸ்ரீ விநாயகா கிரானைட்ஸ்<br>கிரே கிரானைட் குவாரி |
| 5 | திரு.க.விஜயராகவன் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>திரு. ஜியோடெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ்,<br>தருமபுரி |
| | பொதுமக்கள் | : | 110 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு. ஸ்ரீ விநாயகா கிரானைட்ஸ் கிரே கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர் கிருஷ்ணகிரி, பொதுமக்கள் மற்றும் ஸ்ரீ விநாயகா கிரானைட்ஸ் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே தினமலர் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களில் 14.08.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், அஞ்சூர் ராசனகோட்டை கிராமம், ஜெகதேவி கிராமம், அஞ்சூர் கிராமம் மற்றும் சந்தாரப்பள்ளி கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரானைட் குவாரிக்கு உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் கிரே கிரானைட் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி, அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர், ஸ்ரீ விநாயகா கிரானைட்ஸ் கிரே கிரானைட் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

ஸ்ரீ விநாயகா கிரானைட்ஸ் கிரே கிரானைட் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.க.விஜயராகவன் தி/ள். ஜியோடெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று கிரே கிரானைட் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. ***திரு. வினோத் ஜெகதேவிபாளையம் கிராமம்:***

திரு.வினோத் அவர்கள் குவாரியினால் எந்த பாதிப்பும் இல்லை என்றும் மேலும் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

2. ***திரு. வீரமணி பெருகோபணப்பள்ளி கிராமம்:***

திரு. வீரமணி அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டம் வருவதினால் பொது மக்களுக்கும் நன்மை நடக்கும் என்றும் இக்குவாரியை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

3. ***திரு. சரவணன் (முன்னாள் ஊராட்சி மன்ற துணைத்தலைவர்)***
***ஜெகதேவி கிராமம்:***

திரு. சரவணன் அவர்கள், குவாரி வருவதனால் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார். மேலும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

4. **திரு. சையது அகமது ஜிட்டோபணப்பள்ளி கிராமம்:**

திரு. சையது அகமது அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டத்தை வரவேற்பதாகவும் மேலும் இக்குவாரியினால் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் கிடைப்பதாகவும் கூறினார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். . ஸ்ரீ விநாயகா கிரானைட்ஸ் கிரே கிரானைட் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 14 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள். . ஸ்ரீ விநாயகா கிரானைட்ஸ் கிரே கிரானைட் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு எவ்வித மனுக்களும் வரப்பெறவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் | வருவாய் கோட்டாட்சியர் | மாவட்ட ஆட்சியர் 29/9/25 |
|---|---|---|
| தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| ஓசூர் | 5/6 | 5/6 |